## கம்பனிகள் நிதியம் - 2016

---------------------------------------------------

கம்பனிகள் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமாக கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 479 (6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற் கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கம்பனிகள் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சுத்தம் செய்தல், தொற்று நோய் மற்றும் பாதுகாப்பு செலவுகளுக்கான அட்டுறு செலவுகள் ரூபா 336,555 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டிற்கான அட்டுறு வீதவரி ரூபா 326,797 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த திறைசேரி முறி வட்டி வருமானம் ரூபா 458,352 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆண்டின் போது கணனி முறைமை ஒன்று நிறுவுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 13,268,449 தொகை நடைபெறு வேலையின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக மூலதனப்படுத்தி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 5,342,762 தொகை என பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. அக் கணனி முகாமை பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 601,754 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(எ) மாதாந்த வருமான அறிக்கையின் படி, கம்பனி நிதியத்திற்கான மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த மொத்த வருமானம் ரூபா 329,012,495 தொகை எனினும் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 327,172,242 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 1,840,253 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 575,969,333 தொகையினை கணக்கீடு செய்திருக்காது இருந்ததுடன் ரூபா 495,416,667 தொகை என குறிப்பு ஒன்றின் மூலம் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2007 ஆண்டு முதல் 2016 இறுதி வரை அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட வருடாந்த அறிக்கை வருமானம் ரூபா 575,433,332 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 03 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 147,306,666 தொகையும் 1 வருடத்திற்கும் 3 வருடத்திற்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 274,306,666 தொகையும் ஒரு வருடத்தை விட குறைந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 150,820,000 தொகையும் காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்களின் கோவை நிதிப் பிரமாணம் 128(2)(உ) | அரசுக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் அனைத்தையும் தாமதமின்றி சேகரித்தல் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் நிறுவனத்தினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 ஜுலை 20 திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | |
| | (i) பிரிவு (அ) | அறவிடப்பட வேண்டிய வருமானத் தொகை, சேகரிக்கப்பட்ட வருமானத் தொகை, மற்றும் நிலுவை வருமானம் ஏதும் இருப்பின் அத் தொகை தெளிவாக காட்டும் விதத்தில் முறையாக அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| | (ii) பிரிவு (ஆ) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் மேலும் மேலும் சேகரம் ஆகுவதை தவிர்ப்பதற்காக உடனடியாக செயற்படுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 408,130,934 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 400,693,933 தொகையாக காணப்படாமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 7,437,001 இனால் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. திறைசேறி உண்டியல்கள் மற்றும் பிணைமுறி வட்டி ரூபா 33,775,207 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமாகப் பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகள் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை மிகையொன்றினை பெற்றிருந்ததுடன் அவை இடையறாத வளர்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. மேலும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்விற்காக மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 290,829,596 இற்கான பங்களிப்புத் தொகை 2016 வருட இறுதியில் ரூபா 422,320,125 வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக மற்றும் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்ட்டிருந்த சட்டச் சம்பவங்கள்

திணைக்களத்தினால் வெளி தரப்பினருக்கு எதிராக நீதிமன்றங்களில் 101 வழக்குகளும் மற்றும் வெளி தரப்பினால் திணைக்களத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 171 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனி நிதியத்தில் சேவைகள் ஆவண அரசாங்க பொருளாதார கொள்கைகளுக்கு மற்றும் வர்த்தக கொள்கைகளுக்கு இணங்கக்கூடிய விதமாக குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் வர்த்தக மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட ரீதியான நிலைமையொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் அவற்றின் கருமங்களை முறைப்படுத்துவதற்கான முயற்சி ஒன்றினை மேற்கொள்வதாகும். இக்கருமங்களை நிறைவேற்றுவதற்காக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம், சங்க கட்டளைச் சட்டம் (123 ஆவது அதிகாரம்) 1935 இன் 61 ஆம் இலக்க சீட்டு கட்டளைச் சட்டம் மற்றும் 1987 இனை 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் ஆகிய கட்டளைச் சட்டங்களை செயற்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

மீளாய்வாண்டிற்காக கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகள் பதிவு செய்தல் மற்றும் நிதி அறிக்கைகள் பதிவு செய்தல் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்பாடு | எண்ணிக்கை | | மீளாய்வாண்டின் போது அதிகரித்தல் / (குறைதல்) | அதிகரித்தல் / (குறைதல்) சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | | |
| **கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை பதிவு செய்தல்** | | | | |
| வருடாந்த அறிக்கைகள் சமர்பித்திருந்த கம்பனிகளின் எண்ணிக்கை | 37,250 | 41,199 | (3,949) | 10 |
| வருடாந்த அறிக்கைகளின் மூலம் வருமானம் (ரூபா) | 186,083,500 | 206,005,000 | (19,921,500) | 10 |
| **நிதி அறிக்கைகள் பதிவு செய்தல்** | | | | |
| கம்பனிகளின் எண்ணிக்கை | 2,162 | 2,509 | (347) | 14 |
| வருமானம் (ரூபா) | 2,162,000 | 2,509,000 | (347,000) | 14 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 131(1) மற்றும் (2) இன் பிரகாரம் அனைத்து கம்பனிகளினாலும் செலுத்த வேண்டிய வருடாந்த அறிக்கை வருமானங்களில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த திருத்திய நிலுவை வருமான அறிக்கைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 858,650,000 தொகையாகும். இந்த நிலுவை வருமானத்தில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதியத்துடன் தொடர்புடைய நிலுவை வருமானம் ரூபா 572,433,333 தொகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அவ்வருமானம் ரூபா 153,606,667 எனப்படும் 37 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது.

(ஆ) கம்பனிச் சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அறிக்கைகள் பதிவு செய்யப்பட்ட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 7,466 ஆக காணப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை 2162 தொகை ஆகக் காணப்பட்டதுடன் பெற்றுக்கொண்டுள்ள மொத்த வருமானமாகிய ரூபா 2,162,000 இனால் நிதியத்துடன் தொடர்பாக ரூபா 1,441,333 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் பிரகாரம நிதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கம்பனிகளை இனங்கண்டு அவ் அறிக்கைகளை திணைக்களத்தில் பதிவு செய்ய வைப்பதற்காக பொருத்தமான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று திணைக்களத்தில் காணப்படவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனிகளை பதிவு செய்யும் நடைமுறையினை கணனி மயப்படுத்தும் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 88,812,207 இற்காக ஒப்பந்தமொன்று 2014 ஜனவரி 24 ஆம் திகதி ஒப்பந்தக்காரர்களில் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரினால் ரூபா 13,619,577 இற்கான தொகையொன்று பெற்றுக்ககொண்ட பின்னர் ஒப்பந்த வேலை கைவிடப்பட்டிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தனிமையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருமங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் போது கம்பனிப் பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளும் நிதியத்திலிருந்து மேற்கொள்ள முடியுமெனினும் சட்டத்தின் 4 ஆம் உப பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செலவுகளினல் கீழ் அடங்காத வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றினை பங்குகளை கொள்வனவு செய்வதற்காக அமைச்சு செயலாளரின் கோரிக்கையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின் போது நிதியத்தில் இருந்து ரூபா 90,275,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 செம்தெம்பர் 30 திகதி வரை இந் முதலீட்டிருந்து எதுவித நலன்களும் நிதியத்திற்கு கிடைத்திருக்காததுடன் அக் கம்பனி பணமுறிவு ஏற்பட்டமையால் 2007 ஆம் ஆண்டின் போது கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், முதலிடப்பட்ட தொகைக்கான உரிமை அல்லது முதலீட்டுத் தொகையை மீண்டும் கம்பனி நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் நிதியத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக மேற்கொளளப்படும் ஒவ்வொரு கருமங்களின் தன்மை மற்றும் அவற்றிற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள், அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக எடுக்கும் கால வரையறை என்பன தெளிவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதியத்தின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்காக செயல்நடவடிக்கை திட்டத்தை பயன்படுத்த முடியாதிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய கணக்கு குறிப்புக்கள் சமர்பித்திருக்காமை. |
| (ஆ) | ஏடுகள் மற்றும் பேரேடுகள் பேணப்படல் | ஆண்டின் போது சேர்க்கப்பட்டவை, பெறுமானத் தேய்வு கழித்தல் மற்றும் தேறிய பெறுமதி என்பனவற்றை தெளிவாக இனங்கண்டு கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பூர்த்தியாகவும் இற்றைவரைப்படுத்தியும் பேணப்பட்டிருக்காமை. |
| (இ) | வருமான நிருவாகம் | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுத்திருக்காமை. |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | பதவியணி வெற்றிடங்களுக்கான ஆள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (உ) | செயற்பாட்டு நிருவாகம் | நிதியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, முடிவுகட்டிய மற்றும் பெயர்கள் வெட்டப்பட்டிருந்த கம்பனிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு முறையான கணனி முறைமையொன்று நிறுவப்பட்டிருக்காமை. |